★ விலை ரூபா 1-00

ஈழநாடு

THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 பங்குனி 17 ஜ. ஆகிர் 15 இதழ் 49

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 31—3—83

# "பஸ்களை எரிப்பவர்களுக்கு பாடம் புகட்டவேண்டும்!"

## பாராளுமன்றத்தில் பொல்காவலை எம். பி.

(கொழும்பு)

"யாழ்ப்பாணத்தில் கண்ட மாதிரி பஸ்களை எரிக்கிறார்கள். பஸ்ஸை எரிப்பவர்களுக்கு ஒரு பாடம் படிப்பிக்கவேண்டும். அங்குள்ள பஸ்களை எல்லாம் எனது தொகுதிக்கு அனுப்புங்கள். யாழ்ப்பாண மக்களை நடந்துசெல்லவிடவேண்டும்."

பாராளுமன்றத்தில் போக்குவரத்து அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழு நிலை விவாதத்தின்போது பொல்காவலை எம். பி திரு. சுனில் ரஞ்சன் ஜெயக்கொடி பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில்: "யாழ்ப்பாணத்திற்கு புதிய பஸ்களை அனுப்பவேண்டாம். அப்படி புதிய பஸ்களை அனுப்புவதானால் எனது தொகுதிக்கு அனுப்புங்கள்" என்றார்.

## பிரதமருக்கு கௌரவம்

சியோல், மார்ச், 30

இலங்கைப் பிரதமர் திரு. ஆர் பிரேமதாசவுக்கு தென் கொரியா நாட்டின் மிகப் பெரிய விருந்து நேற்று வழங்கப்பட்டது.

தென் கொரியா ஜனாதிபதி தமது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் வைத்து பிரதமருக்கு இந்த விருதை வழங்கினார்.

# யாழ். ஆஸ்பத்திரி அவலநிலை: புறக்கணிப்பு என்று கண்டனம்!

## பாராளுமன்றத்தில் கூட்டணி எம். பி.க்கள் 'போர்க்குரல்'

(நமது சபை நிருபர்)

**யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியின் அவலநிலை குறித்தும் இந்த ஆஸ்பத்திரி தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்பட்டுவருவது பற்றியும் கூட்டணி எம். பி. க்கள் நேற்று பாராளுமன்றத்தில் கண்டனம் தெரிவித்தனர்!**

எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு மு. சிவசிதம்பரம், யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், காவலூர் எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஆகியோர் சபையில் 'போர்க்கொடி' தூக்கினர்!

சுகாதார அமைச்சு நிதிஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே மேற்படி கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

"யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி எல்லாவகையிலும் தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்பட்டு வருகிறது" என்று தமது பேச்சை ஆரம்பித்த யாழ்ப்பாணம் எம். பி திரு. வெ. யோகேஸ்வரன், "யாழ். ஆஸ்பத்திரியில் மருந்து எழுதிக்கொடுக்கக் கடதாசியில்லை. கடதாசியை நோயாளர் தம்முடன் கொண்டுசென்றால் அங்கு மருந்து இருக்காது" என்று கூறினார்.

"முன்னர் இங்கு மருந்துகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவியது. இப்பொழுது மருந்துகளுக்கு மட்டுமின்றி, 'பன்டேஜ்' துணிக்கும் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ் இல்லை. சத்திர சிகிச்சைக் கூடத்திலிருக்கும் உபகரணங்கள்கூட மிகவும் பழையது. இத்துடன் முக்கிய உபகரணங்களும் அங்கில்லை" என்று அவர் சாடினார்.

[8-ம் பக்கம் பார்க்க]

## காங்கேசன் பொறியியலாளர் ராஜ்குமார் கொலைவழக்கு: 6-ல் விசாரணை

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைப் பொறியியலாளர் கொலை வழக்கு விசாரணை அடுத்த மாதம் 6-ம் திகதி ஆரம்பமாக இருக்கிறது.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைப் பொறியியலாளரான டபிள்யூ. ரி. ராஜ்குமார் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டது தொடர்பாக தொழிற்சாலைப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களான எம். ஜயதிஸ்ஸ, ஏ. ஆர் விஜயரத்தின, கந்தையா நடேசு ஆகியோர் சந்தேகத்தின்மீது கைதாகி றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள்மீது கொலைக் குற்றம்சாட்டிக் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இவ்வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

சாட்சிகள் நீதிமன்றம் வரா

(8ம் பக்கம் பார்க்க)

## தப்பியோடிய கைதி மீண்டும் சரணடைந்தார்!

[யாழ்ப்பாணம்]

மல்லாகம் மாவட்ட நீதிமன்ற கூண்டிலிருந்து தப்பியோடிய றிமாண்ட் கைதி ஈவினையைச் சேர்ந்த பத்மநாதன் என்பவர் இரு மாதங்களுக்குப் பின்னர் யாழ் சிறைச்சாலை பிரதம செயலாளரிடம் மீண்டும் சரணடைந்துள்ளார்.

இவர் தப்பியோடி மறைந்திருந்த இரு மாதகாலங்களுக்குள் நடைபெற்ற பல லட்ச ரூபா நகைகள், ரொக்கப் பணம் கொள்ளைச் சம்பவங்களுக்குச் சூத்திரதாரியாக இருந்திருக்கிறார் எனக் கருதி, இவரைக் கைதுசெய்ய பொலிசார்

[8-ம் பக்கம் பார்க்க]

## துப்பாக்கி முனையில் ரூ.72,500 கொள்ளை

### முகமூடி கொள்ளையர் கைவரிசை

(வவுனியா)

முகமூடி அணிந்தமூவரால் துப்பாக்கி முனையில் 72,500 ரூபா பெறுமதியான நகைகள், கிளிநொச்சியில் நேற்று முன்தினமிரவு கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, இராமநாதபுரம் கட்டைக்காடு என்னுமிடத்தில் இராமநாதன் கோதநாதன் வீட்டில் இக்கொள்ளை நடந்துள்ளது.

நள்ளிரவு வீட்டிற்குள் புகுந்த முகமூடிநபர்கள் கோதநாதனையும் அவரது மனைவியையும் பயமுறுத்தி கட்டிப்போட்டுவிட்டு, 10 தங்கப் பவுண் தாலிக்கொடி, 1 சோடி தோடு ஆகியவற்றைக் கொள்ளையடித்துவிட்டு, அங்கிருந்த மோட்டார் சைக்கிளையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

கொள்ளையடித்த பின்னர் வெளியில் துப்பாக்கி வெடி தீர்த்துவிட்டுச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணை செய்துவருகின்றனர். [ல]

## புகைப்படத்தில் புதுமை

எமது ஸ்ருடியோவில் கலர்ப்படங்கள் செய்யும் வைபவத்தை யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு. மு. தம்பிமுத்து சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்துள்ளார் என்பதை ஆதரவாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம். கலர்ப்படங்கள் விஞ்ஞான ரீதியில் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

குகன் ஸ்ருடியோ

பருத்தித்துறை.

6716

## ஏப்ரலில் நீண்ட பாதயாத்திரை
## இலங்கையிலுள்ள வெளிநாடு தூதரகங்களுக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

ஈழமக்கள் விடுதலை முன்னணி ஏப்ரல்மாதத்தில் நீண்டதூர பாதயாத்திரையை நடத்தவுள்ளதாக முன்னணியின் நிர்வாகச் செயலாளர் திரு. மு. டேவிற்சன் அறிவித்துள்ளார்.

பாதயாத்திரைக்கான தொண்டர் குழு, உணவு ஏற்பாடுகள் போன்றவை செய்து முடிக்கப்பட்டுள்ளதாகவும், இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதராலயங்களுக்கு பாதயாத்திரையின் நோக்கங்கள் குறித்து விளக்கி, கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் நிர்வாகச் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

### தூதரகங்களுக்கு விளக்கம்

தமிழ் மக்கள்மீது காட்டப்படும்பாரபட்ச, மனிதாபிமான மற்ற நடவடிக்கைகளை எதிர்த்தும், இளைஞர்களும், பேராசிரியர்களும், வண. பிதாக்களும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டதையும், மனிதாபிமான மற்ற முறையில் பலர் நடத்தப்பட்டுள்ளதையும், இளம்

[8ம் பக்கம் பார்க்க]

## நீண்ட பாதயாத்திரை அடுத்த வாரம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை எதிர்த்தும், கைது செய்யப்பட்ட ஈழ விடுதலைப் போராளிகளை விடுவிக்கவும் கோரி ஈழமக்கள் விடுதலை முன்னணியின் நீண்ட பாதயாத்திரை அடுத்த மாதம் 5ம்திகதி ஆரம்பமாகும்.

இந்த எழுச்சிப் பயணத்தில் கலந்துகொண்டு ஆதரவளிக்குமாறு தொழிற் சங்கங்களுக்கும், இளைஞர் இயக்கங்களுக்

8ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்


## தேவை

யாழ் ரேயன் டிஸ்பென்சறிக்கு நல்ல ஆங்கில கணித அறிவுள்ள பெண் விற்பனை உதவியாளர்கள் உடன் தேவை. நேரில் வரவும்.

(6713)

திறமையான கொம்பசிட்டர்கள் மிஷின் மைன்டர்கள் தேவை. பயிற்சிபெற்ற பெண்களும் சேர்த்துக்கொள்ளப்படுவர். விண்ணப்பிக்கவும்: விளம்பர இல: 6720 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம்

6720

## வகுப்புகள்

கேக் ஐசிங், Hair Styles, பூக்கள் செய்தல், தையல் வேலை வகுப்புகள் ஆரம்பம் 1-4-83 141, ஆஸ்பத்திரிவீதி, [வேம்படி சந்தி] யாழ்ப்பாணம். [காப்புறுதிக்கூட்டுத்தாபனத்துக்கு அருகாமையில்]

6717

சுன்னாகம்

மயிலணி சைவ ம. வித்தியாலயத்தில்

### தொழில் நுட்பப் பயிற்சி

1. மோட்டர் இயந்திரவியல்
2. கட்டிடங்களில் மின் இணைத்தல்
3. வானொலி இயந்திரவியல்

விபரங்களுக்கு அதிபருடன் தொடர்பு கொள்ளவும்.

(6714)

## பிஸ்கால் விற்பனை

மாவட்ட நீதிமன்றம் யாழ்ப்பாணம்

1. சுப்பையா நல்லையாவும் பெண்
2. இந்திராணியும்,

'வெண்மதி', ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை

வழக்காளிகள்

வழக்கு இலக்கம் காசு. சு/771

எதிராக

கார்த்திகேசு முருகேசு சந்திரசேகரம்,
பொற்பதி ரோட்டு, கொக்குவில்.

எதிராளிகள்

மேற்படிவழக்கில் வழக்காளிகள் சார்பில் 1981-ம் ஆண்டு பங்குனி மாதம் 5-ந் திகதி இந்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்வைப்பிரகாரம் ரூபா 17,000/-வதையும் மேலும் ரூபா 10,000/-க்கு 28-7-80லிருந்து 5-3-81 வரை 24% வட்டியும், பின் கூட்டுத்தொகைக்குச் சட்ட வட்டியும், வழக்குச்செலவாக ரூபா 2357/36 சதத்தையும் மேற்சொல்லப்பட்ட எதிராளி செலுத்திக் கடனைத் தீர்க்கத் தவறியமையால், அத்தொகைகளை அறவிடுவதற்காக அவருக்குச் சொந்தமான கீழ் நன்கு விபரிக்கப்படும் ஆதனம் பகிரங்க ஏலத்தில் யாழ் மாவட்ட நீதிமன்ற பிஸ்காலாகிய என்னால் பிஸ்கால் விற்பனை நிருவாகங்கட்கமைய 1983-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25-ந் திகதி காலை 10-00 மணிக்கு அவ்வாதனத்தில்நின்று விற்கப்படுமென இத்தால் சகலருக்கும் அறியக்கொடுக்கின்றேன்.

### குறித்த ஆதன டாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நல்லூர்ப் பகுதி கொக்குவில் கிழக்கு குறிச்சி "பத்தன்வளவு பள்ளவியாவத்தை பள்ளியாவத்தை" நில பர 6¾ வீடும் வடக்கெல்லையிலிருக்கும் கிணற்றில் பங்கும். ஆளுல் உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு. சி. இரத்தினசிங்கம் அவர்களால் 14-1-76ல் அளந்து வரையப்பட்ட பட இல 289 படி நில. பர. 7-01.5 குளியும் இதற்கு எல்லை கிழக்கு குணரத்தினத்திற்கும் எம். நடராசாவுக்கும் சொந்தமான ஆதனம், வடக்கு சண்முகம்பிள்ளைக்கும் வீரசிங்கத்தின் உரிமையாளர்களுக்கும் உரிய ஆதனம், மேற்கு ஒழுங்கை, தெற்கு எம். பொன்னையாவுக்கும் சி. அருணாசலத்திற்கும் உரிய ஆதனம். பதிவு இலக்கம் டி/427/178.

தா. குலஞானம்,
பிஸ்கால்,
யாழ் மாவட்ட நீதிமன்றம்.

29-03-83. (6721)





# 'இரு குத்து காயங்களுடன் இறந்து கிடந்தார்'

## நாச்சிமார் கோவிலடி கொலைவழக்கில் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

"நானும் அன்ரனி என்பவரும் இரு சைக்கிள்களில் சென்றோம். போகும் பொழுது காங்கேசன்துறை வீதி சீனியர் லேன் சந்தியில் இறந்தவர் இரு குத்துக்காயங்களுடன் கிடந்தார்.

நாச்சிமார் கோவிலடி கொலை வழக்கு நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இளையசின்னராசா மேற்கண்டவாறு சாட்சியமளித்தார்.

யாழ். மேலதிக நீதவான் கே. பி. வரதராசா முன்னிலையில் விசாரணை நடைபெற்றது.

எதிரி தரப்பில் சிரேஷ்ட சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம், சட்டத்தரணி ரி. லிங்கராசாவின் அனுசரணையுடன் ஆஜரானார்.

இவ்வழக்கில் நாச்சிமார் கோவிலடியில் 31-10-82 அன்று தர்மடத்தைச் சேர்ந்த சின்னையா தம்பித்துரை என்பவரை கத்தியால்வெட்டிக் கொலை செய்ததாக கொக்குவில் மேற்கைச் சேர்ந்த சின்னராசா சோமசேகரம் மீது யாழ். பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் சாட்சியை குறுக்கு விசாரணை செய்கையில் தெரிவித்ததாவது!

31-10-82 ஞாபகமிருக்கு நானும் இறந்தவரும் சக ஊழியர்கள் மாநகரசபை மின்சாரப் பகுதி அன்றைய தினம் போமன் ஜெகநாதன் என்பவரின் பிள்ளைப் பேறு முடிந்து 31 வது நாள் மதியபோசனத்துக்குச் சென்றிருந்தோம். அங்கு இறந்தவரும் தனபாலசிங்கமும் இருந்தார்கள். சாப்பாட்டுக்குப் பின் தனபாலசிங்கமும் இறந்தவரும் ஒரேசைக்கிளில் முதல் சென்றார்கள் 5 நிமிடம் கழித்து நானும் அன்ரனி என்பவரும் இரு சைக்கிள்களில் சென்றோம் போகும்போது காங்கேசன்துறை வீதி சீனியர்லேன் சந்தியில் இறந்தவர் இருகுத்துக்காயங்களுடன் கிடந்தார்.

நானும் தனபாலசிங்கமும் அன்ரனியும்காயங்களுக்கு சீலை கட்டிவிட்டு கார் ஒன்றில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றோம். சத்திர சிகிச்சை செய்யப்பட்டது.

சம்பவம் நடந்த திகதியிலிருந்து இருமாதங்களுக்குப்பின்னர் அவர் இறந்தார்.

மேல்விசாரணை ஏப்ரல் 5க்கு ஒத்தி வைக்கப்பட்டது.

(மா)

## உரும்பராய் இந்துக்கல்லூரி இல்லப்போட்டி

(யாழ்ப்பாணம்)

உரும்பராய் இந்துக்கல்லூரி வருடாந்த இல்லவிளையாட்டுப் போட்டி கல்லூரி அதிபர் திரு. இ. சிவானந்தன் தலைமையில், கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. மேற்படி விளையாட்டுப் போட்டிக்கு பிரபல கட்டட ஒப்பந்தகாரர் திரு. சு. கி. மனோகரபூபனும், பாரியாரும் பிரதமவிருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

தருமா, வீமா, அர்ச்சுனா, நகுலா ஆகிய நான்கு இல்லங்களுக்கிடையிலான இப்போட்டியை, பாடசாலைக் கொடியை ஏற்றி திரு சு. கி. மனோகரபூபன் ஆரம்பித்துவைத்தார். போட்டியில் கூடுதலான புள்ளிகளைப்பெற்ற வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்குமான வெற்றிக் கிண்ணங்களை பிரதம விருந்தினர்கள் உபகரித்தனர். வெற்றியீட்டியவர்களுக்கான பரிசுக்கிண்ணங்களையும் கேடயங்களையும் திருமதி கருணாதேவி மனோகரபூபன் வழங்கினார்.

இப்போட்டியில் தர்ம இல்லம் முதலிடத்தைப்பெற்றது.

(அ)

## மகாவித்தியாலத்திற்கு பாண்ட் கருவிகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மகாவித்தியாலயத்திற்கு பாண்ட் வாத்தியஇசைக்கருவிகள் கிடைத்துள்ளன. பரவலாக்கப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து இதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து சென்திரேசா மகளிர் கல்லூரிக்கு பாண்ட் இசைக்கருவிகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன.

(அ)

## கிராமோதய சபைத் தலைவர்கள்

[கிளிநொச்சி]

புளியம் பொக்கனை கிராமோதயசபையின் தலைவராகக் கமத்தொழில்விரிவுப் பெருக்கக்குழுவின் தலைவரான திரு. க. தணிகாசலம் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்.

பிரஸ்தாப சபையின் தலைவர் விசேடசேவை அலுவலர் திரு; க தர்மலிங்கம் தலைமையில் நாகேந்திரபுர வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது;

தர்மபுரம் கிராமோதய சபையின் தலைவராக நன்னீர் மீன்பிடிச் சங்கத் தலைவர் இ. கதிரவேலு ஏகமனதாகத் தெரிவானார். தர்மபுரம் 1ம் இலக்கப்பாடசாலையில் விசேட சேவை அலுவலர் க. தர்மலிங்கம் தலைமையில் இத்தெரிவு இடம் பெற்றது.

வட்டக்கச்சிக் கிராமோதய சபையின் தலைவராக மீண்டும் சி தங்கராசா போட்டியின்றித் தெரிவானார். இராமநாதபுரம் கிராமோதயசபையின் தலைவராக திரு ஜே,எம். பி. ஜெயராசா மீண்டும் ஏகமனதாகத் தெரிவானார். விசேட சேவை அலுவலர் ஐ. சிவராசா இத்தெரிவுகளை நடத்தி வைத்தார்.

(அ)

### சண்டிலிப்பாய்

(நெடுந்தீவு)

சண்டிலிப்பாய் கிராமோதய சபையின் தலைவராக திரு. ம. பொ. செல்வரத்தினம் ஜே பி. மீண்டும் போட்டியின்றித் தெரிவானார். சண்டிலிப்பாய் கிராம அபிவிருத்திச் சங்கத்தினதும், சமய அபிவிருத்திச் சங்கத்தினதும் தலைவராகவும் ஆலங்குழாய் முருகமூர்த்தி கோவிலின் நம்பிக்கைப் பொறுப்பாளருமாகப் பதவிவகிக்கும் இவர் இப்பகுதியின் அபிவிருத்திக்கு, படித்துவேலை வசதிகளற்று இருக்கும் இளைஞர்களுக்குத் தொழில் வாய்ப்புக்களைத் தேடிக்கொடுக்கும் பணியிலும் தீவிரநாட்டம் கொண்டுள்ளார். யாழ்ப்பாணம் தொகுதி பகுதியின் உயர்வுக்காக முடிந்தவரை சேவைபுரிவதே தனது லட்சியம் என்று கூறியுள்ளார்.

### பத்தமேனி

(அச்சுவேலி)

பத்தமேனி கிராமோதய சபைத் தலைவராக திரு. ச. க. ஆறுமுகம் மீண்டும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

திரு. ஆறுமுகம். இடைக்காடு இந்துநெறிக்கழகத் தலைவரும் பிரபல சமூகசேவையாளருமாவார்.

(அ)

## புதிய தலைவர்

(துணுக்காய்)

நாவற்குழியைச் சேர்ந்த மா. கிருஷ்ணன் என்பவர் சாவகச்சேரி தெங்கு பனம் பொருள் விற்பனைக்கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகத்தெரிவு செய்யப்பட்டார். இச்சங்கத்தின் பொதுக்கூட்டம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெற்றபோது பொதுச் சபைப் பிரதிநிதிகளால் போட்டியின்றி ஏகமனதாக இவர் தெரிவு செய்யப்பட்டார்.

இவர் நாவற்குழி கிழக்கு சனசமூக நிலைய முன்னைநாள் செயலாளரும் சாவகச்சேரி தெங்கு பனம்பொருள் விற்பனைக் கூட்டுறவுச் சங்க முன்னைநாள் செயலாளராகவும் கடமை புரிந்துள்ளார்.

## ரூபவாஹினியில் இன்று

மாலை 6-00 இன்றைய நிகழ்ச்சிகள்.
6-01 குழந்தைகளுக்கான விசேட நிகழ்ச்சி.
6-15 'கார்ட்டூன்' திரைப்படம்.
6-30 இளைஞர் விவகாரம் சம்பந்தமான ஒரு நிகழ்ச்சி.
7-00 செய்தி மஞ்சரி (தமிழ்)
7-14 நாளைய நிகழ்ச்சிகள்.
7-15 'கிறீன் ஹோனட்' [ஆங்கிலம்)
7-45 சிங்கள நிகழ்ச்சி.
8-15 செய்திமஞ்சரி (சிங்களம்]
8-55 சிங்களத் திரைப்படம்
9-30 செய்தி மஞ்சரி (ஆங்கிலம்)
9-45 திரைப்படத் தொடர்ச்சி.
11-30 நிகழ்ச்சிகள் முடிவு.

## வலி கிழக்கு விளையாட்டுப் போட்டிகள்

[அச்சுவேலி]

வலி. கிழக்கு உதவி அரசாங்க அதிபர்பிரிவு வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 9ம், 10ந் திகதிகளில் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் பகுதி உதவி அரசாங்க அதிபர் திரு. கு. கிட்டிணர் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா கலந்து கொள்வார். இதற்கான ஏற்பாடுகளை வலி.கிழக்குப்பகுதி விளையாட்டுத்திகாரி செல்வி அ. சு. மைக்கேல் பிள்ளை செய்துவருகிறார்.

தவக்கால நற்சிந்தனை



## 'நான்செய்தது போல் நீங்களும் செய்யுங்கள்'

பாஸ்கா இரவுணவின் போது யேசு தம்சீடர்களின் பாதங்களைக் கழுவுகிறார். குருவிற்கு சீடர்கள் செய்ய வேண்டியதை குரு சீடர்களுக்கு செய்கிறார். பின்

'ஆண்டவரும் போதகருமான நான் உங்கள் பாதங்களைக் கழுவினேன் என்றால், நீங்கள் ஒருவர் ஒருவருடைய பாதங்களைக் கழுவவேண்டும். நான் உங்களுக்கு முன்மாதிரி காட்டினேன். நான் செய்தது போல் நீங்களும் செய்யுங்கள்' -என்று கட்டளையும் தருகிறார்.

நாம் மற்றவர்களின் பாதங்களைக் கழுவவேண்டாம். ஆனால் எவ்வளவு தூரத்திற்கு நம் சேவையை மற்றவர்களுக்குக் கொடுக்கிறோம்?

வீட்டில், வீதியில், நண்பர் மத்தியில், அன்னியர் மத்தியில், ஊரில். நாட்டில் நம் சேவையை மற்றவர்களுக்கும் கொடுக்க எவ்வளவு சந்தர்ப்பம் உண்டு.

'நான் செய்ததுபோல் நீங்களும் செய்யுங்கள்' எனும் யேசுவின் வார்த்தைகளின் பொருளை எமது இன்றைய சமுதாயத்தில் உணரா விட்டால் என்றுமே உணரமாட்டோம்.

அருட் செல்வன் ம. ரூபன்

**மணிவாக்கு**

எந்த இம்சையையும் சகிக்க வல்லவர்கள், ஒரு குறைபாடும் இல்லாதவர்கள் பயங்கரமான வர்கள்; அவர்களை வெல்வது அரிது.

— அனடோல் ப்ரான்ஸ்

# நமது நோக்கு

## திருகோணமலை

'கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த கோண மாமலையானை'த் துதித்து இவ்விடயத்தை ஆராய விழைகின்றோம்.

தேவாரகாலத்தில் கேதீச்சரமும், கோணமாமலையும் நாயன்மார்களின் பாடல் பெற்றிருந்தமை இன்றும் என்றும் தமிழ் மக்களின் இதயத்தைத் தொட்டுநின்மையது. இந்த நாகரிகத்தின் உயர்ந்த நிலை!

இலங்கையைப் பொதுவாவும் வடபகுதியைச் சிறப்பாகவும் பாதுகாத்து வந்த முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் என்றும் உள்ளவர்; எல்லாம் வல்லவர்; எல்லாம் அறிபவர் என்பது சைவ சமயப்பாடம் மட்டுமல்ல; மக்கள் அனுபவத்திலும் உணர்ந்தறிந்த உண்மை.

தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் உரியவன் என்பதுபோல், நாம் குறிப்பிடும் இப்புராதன சிவத்தலங்கள் இந்நாட்டவர்கள் எல்லோருக்கும் உரியன; இதனை உணராத அரசியல் நடவடிக்கைகள் ஆபத்தில் முடியும்.

எனவே திருகோணமலையில் எல்லா மதத்தினரும், எல்லா இனத்தினரும் ஒற்றுமையாக வாழ்வதற்கு எம்பெருமானின் விசேட பாதுகாப்புண்டு.

இந்தப் பின்னணியில் இன்று திருகோணமலையின் முக்கியத்துவம் இறைவன் படைத்த இயற்கைத் துறைமுகத்தை நாடி நிற்கின்றது.

திருகோணமலையைக் கைப்பற்றும் வல்லரசு உலக யுத்தம் ஒன்று ஏற்படுமாயின் ஆசியாவின் சர்வாதிகாரியாக அமையலாம். இந்த ஏக்கம் பல இடங்களில் உண்டு.

இந்தச் சின்னஞ்சிறிய அழகுமிகுந்த நாட்டில் உலக மகாயுத்தம் ஒன்றின் கேந்திரஸ்தானம் இடம் பெறுவதால் வல்லரசுகளின் கண் இதிலேயே பதிந்திருப்பது இயற்கை.

நாமொரு அணிசேரா நாடு இதுபற்றிய ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமென்று எதிர்க்கட்சித்தலைவர் பாராளுமன்றத்தில் குரலெழுப்பியிருக்கிறார். இதற்குப் பதிலளித்த அமைச்சர் சிறில் மத்யூ, அணிசேரா நாடுகள் என்று எதுவும் உண்டாவென்று கிண்டல் செய்திருப்பது தமிழர்கள் திருகோணமலை தங்கள் பிரதேசமென்று கொள்ளமுடியாதென்ற கருத்தைக் கொண்டிருக்கலாம்.

அமெரிக்காவுக்கு விடுதலையில் போய்த்திரும்பிய அமைச்சர் சிறில் மத்யூ இலகாலம் நாகரத்து. விடயத்துக்கமைந்த சுருக்கமான பேச்சுடையவராகக் காணப்பட்டார். இன்று பழையபடி தமிழ் விடயங்களைப் பரிகசிக்கும் பாணி திரும்புகின்றதாவென்று சந்தேகிக்குமளவில் அமைச்சரின் கூற்று விசனமளிக்கின்றது.

கைத்தொழில் பற்றிப் பேசுங்கள் விடயத்துக்கு திரும்பி வாருங்கள் என்ற பாராளுமன்ற சபாநாயகரின் கோரிக்கைக்கு அமைச்சர் அளித்தபதில் வடக்கில் பயங்கரவாதம் கைத்தொழிலாக நடக்கிறது என்பதே!

எங்கள் வாசகர்கள் பலர் 1981ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சம்பவங்களை நினைவுகூருவதும், இன்றும் யாழ்ப்பாண பொதுஜன நூலகம் அழிந்த நிலையிலிருப்பதை நினைந்து வேதனைப் படுவதும் இயற்கை; இவற்றை மறக்க அமைச்சர் விடமாட்டார் போலத் தெரிகின்றது.

யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய கைத்தொழில் கல்வி; அது பறிபோக வெங்காயம் மிளகாய் போன்ற விவசாய உற்பத்தி; அதுவும் பறிபோனால் விரக்தியுற்ற மக்கள் என்ன செய்வார்களென்பது முன்கூட்டிச் சொல்லமுடியாது.

ஒன்று திடமாகச்சொல்லலாம்; கைத்தொழில் அமைச்சரும் ஒத்துக்கொள்ளக் கூடிய உண்மை அது. எந்தத் தொழிலை இப்பகுதி மக்கள் நடத்த முற்படுகின்றனரோ அதனைத் திறமையுடன் செய்துமுடிப்பார்கள்.

பயங்கரவாதம் போன்ற அழிவுத்தொழில்கள் அவர்களின் தலைவிதியாகவிருக்கக் கூடாதென்பதே எங்கள் பிரார்த்தனை.

யாழ்ப்பாணம் தொடக்கம் திருகோணமலை வரைக்கும் அரச பயங்கரவாதம் தொடர்ந்திருப்பதாகத் தினமும் செய்திகள் குவிகின்றன. இளைஞர் பயங்கரவாதத்தை ஒழிக்க எடுக்கும் முயற்சி.

திருகோணமலை ஒரு பெரிய ராணுவ தளமென்றமிடுக்கு ஆட்சியாளருக்கு ஏற்படுவது இயல்பு. அது மட்டுமல்ல சுத்த தமிழ்ப் பிரதேசம் இன்று ஜனத் தொகையில் அரைவாசிதான் தமிழர்களென்று கணக்கிடப்படுகிறது. மற்றைய இனத்தவர்கள் வசதியானால் ஏன் குடியேற முடியாதென்ற கேள்வியை நாம் ஆட்சேபிக்கவில்லை; காணியில்லாதவர், காணி உள்ள இடங்களில் குடியேறி அங்கு அரசியல் ஆதிக்கத்தை நிலைநாட்ட முயல்வது ஆபத்தென்பதையே நாம் தெளிவாகச் சுட்டிக்காட்டவேண்டும்.

திருகோணமலையில்பாரதிபுரக் கிராமத்தில், இனக்கலவரக் கொடுமையால் அல்லுண்ட அப்பாவி மலையக மக்கள் குடியேறி இருந்தனர். அவர்களின் கொட்டில்களையும் குடில்களையும் எரித்து அவர்களுக்கு உதவி புரிய வந்த காந்தீயதொண்டர்களை அடித்துத் துன்புறுத்திய சம்பவம் என்ன அடிப்படையில் நிகழ்ந்ததென்று விசாரணை செய்ய இந்நாட்டில்: இந்த ஆட்சியில் இடமில்லையா?

கிராமசேவை அலுவலரும் அரசாங்க உத்தியோகத்தர்களும், பொலிஸாரும், நெருப்புடன் விளையாடுவது அரசாங்க லீலைகளில் ஒன்று?

பாதிக்கப்பட்டவர்களனர் தங்கள் சொந்தக் காணிகளில் வசிப்பவர்கள். மலையக மக்கள் 'கள்ளத் தோணிகள்' என்ற கருத்து; காந்தீய தொண்டர்கள் என்றால் தமிழ்ப் பயங்கரவாதிகள் என்ற சாட்டு; கேட்பவர் யார்? மலையகமோ வடபகுதியோ—இவர்கள் எல்லோரும் பயங்கரவாதத்தைத் தொழிலாகக் கொண்டவர்கள் என்ற கருத்தைக் காட்டினால், பதவி உயர்வு கிடைக்குமென்று அரசாங்க ஊழியர்கள் கனவு காண்பதற்கு ஆதாரம் உண்டு.

அது என்னவானாலும் இத்தகைய அநியாய, காட்டுமிராண்டிச் செயல்கள், அதுவும், ஏழை, எளிய கதியற்ற அகதிகளில் கட்டவிழ்த்துவிடத் துணிந்த அதிகாரிகளையும், பொலிஸாரையும், தட்டிக்கேட்கும் துணிவு திருமலை பாராளுமன்ற அங்கத்தவருக்கு உரியது. அவர் மட்டுமல்ல ஒவ்வொரு தமிழ் எம். பிக்கும், பொதுவாக நீதியில் நாட்டம் கொண்ட மக்கள் பிரதிநிதி ஒவ்வொருவருக்கும் உரியது.

உடனடி நிவாரணம், பாதுகாப்புபோன்ற தடுப்பு நடவடிக்கைகள் ஜனாதிபதியின் கட்டளையில், பொலிஸ் மாஅதிபர் எடுக்கவேண்டுமெனவற்புறுத்துகின்றோம்.

திருமலை பாரதிபுரம் இன்றைய 'முப்புரங்களில்' ஒன்றாயிருக்கலாம்; ஆனால் விரிசடைக்கடவுளை விட வேறெவரும் அதனை எரிக்க இயலாது.

# பிரிந்துகிடந்த தமிழர்களை ஒன்றிணைத்து
# புதிய தேசிய இனம் ஒன்றை உருவாக்கினர் எஸ். ஜே. வி.

[1981-ம் ஆண்டு பேராசிரியர் அ. ஜெ. வில்சன் நிகழ்த்திய எஸ். ஜே. வி. செல்வநாயகம் நினைவு சொற்பொழிவின் தமிழாக்க வெளியீட்டிலிருந்து இக்கட்டுரை தொகுக்கப் பட்டது.]

திரு. செல்வநாயகம் ஒரு தேசிய இனத்தின் தந்தை, தமிழ் இனத்தின் தந்தை. அன்னியராகிய போர்த்துக்கேயர் 1611-ல் வடஇலங்கையிலிருந்து தமிழ்அரசை அழித்தொழித்த பின்னர் தமிழ்த்தேசிய இனத்துக்கு உயிரூட்டி மீண்டெழும்ப வைத்தவர் திரு. செல்வநாயகம் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழும், சுதந்திரத்தையடுத்து 1947–1956 வரையிலான ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியிலும் இலங்கைத் தமிழ்பேசும் மக்கள் யாழ்ப்பாணத் தமிழர், மன்னார்த்தமிழர், வவனியாத் தமிழர், திருகோணமலைத் தமிழர், மட்டக்களப்புத் தமிழர், கொழும்புத்தமிழர், இந்தியத்தமிழர் என்று பிரிந்து நின்றனர்.

திரு. செல்வநாயகத்தின் தலைமையில் தமிழ்மக்களின் இப்பல்வேறு பிரிவுகளும் ஒருங்கிணைக்கப்பட்டு ஒன்றாகத் திரண்டனர். புதிய தேசிய இனம் ஒன்றை நிறுவினார், திரு. செல்வநாயகம், இது சிங்களத்தேசிய இனத்திலிருந்து வேறான ஒன்று, தமிழ் தேசிய இனத்தை இவர் மீண்டும் உருவாக்கியதுதான் இவரது மாபெரும் சாதனை; தமிழ் பேசும் மக்களின் சமீபகால வரலாற்றில் ஆபூர்வம் மிக்க நிகழ்ச்சி, இதைச் சாதிப்பது உண்மையிலே மிகக்கடினமான காரியம் என்று அவர் ஒருமுறை என்னிடம் கூறினர்.

'தமிழ்மகன் மூளையுள்ளவன் கெட்டிக்காரன், எனவே சமுதாயம் என்றில்லாது பெரிதும் தன்னினைவுநிரம்பியவன் என்று கூறினர். பிரபல பிரெஞ்சுத் தளபதி சாள்ஸ்டிகோல் தனது பிரெஞ்சு மக்களைப் பற்றிக் கூறியது எனக்கு ஞாபகம் வந்தது. ''பிரெஞ்சுக்காரர் அனைவரும் தமக்குள்ளே ஒருவரை ஒருவர் வெறுப்பவர்கள், ஆனால் அனைவரும் பிரெஞ்சு நாட்டை நேசிப்பவர்கள்'' என்றுரவர்.

தனதுதமிழரசுக்கட்சி தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் ஒருகுடையின்கீழ் ஒன்றுபடுத்த முடிந்தது. அவர்களது சேரிட்டத்தைச் சுட்டிக்காட்டியது தன்மானத்துக்கும் தேசிய இனத்துவத்துக்கும் அதைவிட வேறுபாதையே இருக்க முடியாது என்று அதையேசேரிக் கொண்டார். மொழியும் பிரதேசமும் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்கமுடியாதவை என்று பலருக்கும் தெளிவுபடுத்தினர்.

இந்தமகமெரும் சாதனையை எவ்வாறு அவர் சாதித்தார்?

\- பேராசிரியர் அ. ஜெ. வில்ஸன் -

ஒரு தேசியத் தலைவருக்கு வேண்டிய சொத்துக்கள் எதுவும் அவரிடம் இருக்கவில்லை. அவர் ஒரு நோயாளி; செவிப்புலன் குறைந்தவர்; குரல் தணிந்தவர் இத்தகைய குறைபாடுகள் இருந்தும் தமிழ்பேசும் மக்களுக்கு அவர் போற்றுவதற்குரியவரானர். இத்தகைய முடமாக்கும் குறைபாடு கொண்ட நோயாளிபோன்ற இன்னுமொரு தலைவர் இருந்தார். அவர்தான் ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதி பிராங்கிலின் ரூஸ்வெல்ற் அவர் போலியோ நோயால் தாக்குண்டு இடுப்பிலிருந்து பாதம் வரை அவருக்குப் பாரிசவாதம் இதனால் நடக்க இயலாதவர். சில்லுக் கதிரையில் வைத்துத் தள்ளப்பட்டார். ஆயினும் அமெரிக்க மக்கள் அவரைப் பெரிதும் நேசித்தார்கள். தனது ஜனாதிபதியாக மீண்டும் மீண்டும் அவரைத் தெரிந்தெடுத்தார்கள். நாலாண்டு காலப்பதவிக்கு நாலு தடவை அடுத்தடுத்துத்தெரிவு செய்யப்பட்டவர் ரூஸ்வெல்ற் இவரைப்போன்று பெரிதும் நேசிக்கப்பட்டவர்தான் திரு செல்வநாயகமும்.

திரு செல்வநாயகத்தின் மிகப்பெரிய பலவீனம் அவரது செவிப்புலன் சட்டத்தொழில் புரிந்தபோது 'செவிப்புலக் கருவி' ஒன்று மூலம் இதை அவர் சமாளித்தார். 1950ல் சட்டமாணவர்களுக்கு வைத்திய மாணவர்களுக்குமிடையே நிகழ்ந்த கிரிக்கெட் போட்டியில் அவரது இக்கட்டு நிலையை வேடிக்கைக்கார இம்மாணவர்கள் திறம்படவிபரித்துக்காட்டினர்கள். திரு பொன்னம்பலத்தையும் அனைத்திலங்கைக் காங்கிரசையும் விட்டு 1952ல் விலகியபோது இவர் தன்னை அரசியல் வனந்திரத்துக்குத் தள்ளிக்கொண்டார். என்று இம் மாணவர்கள் நம்பினர்கள் திரு. செல்வநாயகத்தைப் போல ஒரு பொம்மையைக் கட்டினர்கள் உடலால் மெலிந்து பசியால் நலிந்த ஒரு வெருளி உருவம் அந்தப் பொம்மையின் கழுத்தில் தொங்கிய அட்டையில் 'குருடுச் சீடர்கள் பின்தொடரும்

[8ம் பக்கம் பார்க்க]

# பொன்னையாவைத் தந்து புகழ்பெற்றது குரும்பசிட்டி

நாட்டுக்கும் நற்றமிழுக்கும் தொண்டாற்றி, பிறந்த கிராமமாகிய குரும்பசிட்டிக்கும் பெரும் தொண்டாற்றிப் பெரும் புகழ் படைத்தவர் 'ஈழகேசரி'யின் தந்தை திரு நா. பொன்னையா. திசையறி கருவி எப்போதும் அசைந்தாடித் திசைகளைக் குறிப்பிட்டாலும் வடக்குத் திசையே நிரந்தர ஸ்தானமாயிருப்பது போல, பலவகையிலும் தனது சேவையை விரிவுபடுத்திக் கொண்டாலும் ஈழகேசரி பொன்னையா அவர்கள் தமிழைப் பேணிக்காப்பதில் முழுமையாக ஈடுபட்டிருந்ததை

**த. இராசரெத்தினம்**
(செயலாளர்,
குரும்பசிட்டி
சன்மார்க்க சபை)

அவரது வாழ்க்கையிற் காண்கிறோம்.

### உத்தரவராகம்

திரு சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்களுக்குப் பின்னரும் தொல்காப்பியத்தைச் சிறந்த முறையில் வெளியிடவல்ல அறிஞர் பரம்பரையினர் யாழ்ப்பாணத்திலும் உளரென்பதை இந்தியத் தமிழகம் அறிந்துகொள்ளக் கருவியாகவும் கருத்தாவாகவும் விளங்கியவர் அமரர் பொன்னையா. மகாவித்துவான் பிரம்மஸ்ரீ கணேசையர் அவர்கள் எழுதிய உரை விளக்கக் குறிப்புடன் தொல்காப்பியத்தைப் பதிப்பித்தார்கள். இதன் காரணமாக மகா வித்துவான் கணேசையரின் மேதாவிலாசத்தை நாடே அறிந்து கொள்ளும் வாய்ப்பும் உண்டானது. தொல்காப்பியத்தைப் பதிப்பித்தமையைப் பாராட்டிப் பண்டிதமணி இலக்கிய கலாநிதி திரு சி. கணபதிப்பிள்ளை அவர்கள் தமது தொல்காப்பிய ஆராய்ச்சிக் கட்டுரையில் குறிப்பிட்டதை இங்கு தருகிறோம்:

''தொல்காப்பியம் சிதைந்து மறையும் காலத்தில் அதனைத் தேடி எடுத்துப் பரமோபகாரம் செய்த சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் ஆதிவராகம் ஆயினர். பிறகு தாமோதரம் பிள்ளை அவர்கள் எடுத்து ஏந்திய தொல்காப்பியம் மறைகிற சமயத்தில் நன்றி மறவாமல அதனை எடுத்துத் தாங்கிப் பயன்படுத்தும் முறையை உபசரித்து அமரர் நா. பொன்னையா அவர்கள் உத்தரவராகமாயினர்கள்''

### தமிழ்த் தொண்டுக்கு அத்தாட்சி

வண. சுவாமி ஞானப்பிரகாசருடைய சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ் ஆங்கில அகராதியைப் பதிப்பித்தமையும் பலகலைச் செல்வங்களை நூல் வடிவில் வெளியிட்டமையும் பன்னூற்றுக்கணக்கான சிறந்த பாடப் புத்தகங்களை பல அறிஞர்களைக் கொண்டு எழுதுவித்து அச்சிட்டமையும் அமரர் பொன்னையா ஆற்றிய ஆக்கபூர்வமான தமிழ்த் தொண்டாகும். 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு' என பாரதி வள்ளுவனாலே தமிழ் நாடு பெருமையடைந்தது என்று பாராட்டுவது போல, பொன்னையா அவர்களைத் தமிழுலகுக்கு அளித்து அதனாற் பெருமையை ஈட்டிக் கொண்டது குரும்பசிட்டி.




சுவிஸ்ஸோட்டேலில் பங்காளியாகி உங்கள் பணத்திற்கு 100% வரிச் சலுகை பெறுங்கள்!

ஒவ்வொன்றும் ரூ. 10/- முகப்பெறுமதி கொண்ட

16,000,000 சாதாரண பங்குகள், முழுக்கொடுப்பனவும் பெற்று

ஒவ்வொன்றும் ரூ. 10/- முகப்பெறுமதி கொண்ட

# 16,000,000 சாதாரண பங்குகள், முழுக்கொடுப்பனவும் பெற்று பொதுமக்களுக்கு வழங்கல்.

## பொதுத் தகவல்கள்

சுவிஸ்ஸோட்டேல், சர்வதேசப் புகழ்பெற்ற ஒரு 5 நட்சத்திர சுப்பர் லக்ஷறி ஹோட்டல் தொடராகும். இது இப்பொழுது இலங்கையிலும் நிர்மாணிக்கப்படவுள்ளது. நீங்கள் இந்த ஹோட்டலில் பங்காளியாக, அரியதோர் சந்தர்ப்பம் இப்பொழுது அளிக்கப்படுகின்றது. உங்கள் முதலீட்டுக்கு வரிச்சலுகையுண்டு. இப்படி முதலீடு செய்வதால் உங்கள் பணத்தை ஓர் பாதுகாப்பான வழியில் பயன்படுத்தலாம். அத்துடன் வரி செலுத்த வேண்டிய கவலையுமில்லை. எனவே, இந்த ஹோட்டலில் முதலீடு செய்து, உங்கள் எதிர்கால நிதி நிலைமையை உறுதிப்படுத்துங்கள்.

பங்குகள் வழங்கல்களுக்கான விண்ணப்பப் பட்டியல், 1983ஆம் ஆண்டு மார்ச் 14ஆம் திகதி காலை 9-00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் (ஏற்கனவே நிறுத்தப்படாவிடின்) 1983, ஜூலை மாதம் 1ம் திகதி மாலை 4-30 மணிக்கு முடிவுறும்.

## வெளிநாட்டு ஒத்துழைப்பாளர்கள்:

சுவிஸ் ஏயர் நெஸ்லே ஹொட்டேல்ஸ்லிமிட். நிறுவனம், உலகில் மிகவும் பிரபல்யமான சர்வதேசக் கம்பனிகளான சுவிஸ் ஏயரும் (சுவிற்சர்லாந்தின் தேசிய விமான சேவை), நெஸ்லே லிமிட். (ஒரு உலகளாவிய உணவுப் பொருள் தயாரிக்கும் நிறுவனம்)உம் ஒன்றிணைந்து நிறுவிய ஒரு ஹோட்டல் முகாமைத்துவக் கம்பனியாகும். இந்தக் கம்பனிதான் சுவிஸ்ஸோட்டேல் குறூப்பின் முகாமையாளர்களாகச்செயல்புரிகின்றது. பல சார்ட்டர் விமான சேவைகளிலும், பிரயாண முகவர்களாகவும் மற்றும் சிற்றுண்டிச்சாலைகளின் சொந்தக்காரர்களும் உலகளாவிய 170 நகரங்களில் 200க்கும் மேற்பட்ட விற்பனை அலுவலகங்களைக் கொண்டவர்களுமான முதலீட்டுச் சிறப்புமிக்க நிறுவனம் சுவிஸ் ஏயர் ஆகும்.

நெஸ்லே லிமிட். நிறுவனம், சிறந்த ஆலோசனைகளை வழங்குவதோடு, வகன் லிற்ஸ்நவறிஸ்ம் (140 நாடுகளில் 1000 பிரயாண முகவர் நிலையங்கள்) நிறுவனத்தோடு மிகவும் நெருங்கிய தொடர்பும் கொண்டுள்ளது. மேலும், அமெரிக்காவிலுள்ள ஸ்ரப்பர் கோர்ப்பறேஷன் (30 ஹோட்டல்களையும் மற்றும் நியூயோர்க், சிக்காகோ, வோஷிங்டன் போன்ற நகரங்களில் விற்பனை அலுவலகங்களையும் கொண்ட நிறுவனம், உடனும் மிகவும் சடுபாடு நெஸ்லே லிமிட். நிறுவனத்திற்குண்டு.

## பணிப்பாளர்கள்:

**டொன் புத்ததாஸ வெத்தசிங்ஹ,**
''அனோமா'', கொஸ்வத்த வீதி,
நாவல, இராஜகிரிய.
(கம்பனிப் பணிப்பாளர்)
தலைவர்:
எலெக்ரோ குறூப் கம்பனிகள்!
எலெக்ரோ பிளாஸ்ரிக்ஸ் லிமிட்.
எலெக்ரோ சேல்ஸ் லிமிட்.,
பணிப்பாளர்:
போர்மோஸா இன்டஸ்ற்றீஸ் லிமிட். (F.T.Z.)
இன்டஸ்ற்றியல் பிறுன்ஸ் லிமிட்.
றீஜென்ஸி கார்மென்ஸ் லிமிட்.
ஓஸெனிக்ஸ் டிரெவல்ஸ் லிமிட்.
மொறக்கல எஸ்ற்ரேற் கம்பனி.

**காமினி ஹேமன் வெத்தசிங்ஹ,**
147/1, சேனநாயக அவெனியூ,
நாவல.
(கம்பனிப் பணிப்பாளர்)
உப தலைவர்:
எலெக்ரோ குறூப் கம்பனிகள்.
பணிப்பாளர்:
இன்டஸ்ற்றியல் பிறுன்ஸ் லிமிட்.,
G.W. கொன்ஸ்றக்ஷன் கம்பனி,
G.W. ஹொட்டேல்ஸ் லிமிட்.

**ஜோன் ஏட்லி றஸல் பெரேரா,**
27, உயன வீதி, மொறட்டுவ.
(சிரேஷ்ட சட்டத்தரணி)
பணிப்பாளர்:
சிலோன் பேப்பர் ஸக்ஸ் லிமிட்.;
மைக்ரிஸ் இன்டஸ்ற்றீஸ் லிமிட்.;
கொன்ஸொலிடேட்டெட் பக்கேஜிங் இன்டஸ்ற்றீஸ்
ஆஷா ஏஜென்ஸீஸ் லிமிட்.,
கிளப் ஓஸெனிக் லிமிட்.

**டாக். கந்தசாமி அருணாசலம்,**
ஸ்ரேசன் வீதி, கொழும்பு-6.
(மருத்துவர்)
தலைவர் / பணிப்பாளர்:
பேர்ள் ஐலன்ட் புறடக்ஸ்,
எலெக்ரோ பைப் இன்டஸ்ற்றீஸ் லிமிட்.

**ஹாஸெயின் ஸாட் ஹஷீம்,**
திம்பிரிகஸ்ஸாய வீதி, கொழும்பு.
(கம்பனிப் பணிப்பாளர்)
தலைவர்:
மல்ஸிப்ஸ் சிலோன் லிமிட்.,
மல்ஸிப்ஸ் டிரவெல்ஸ் லிமிட்.,
சிலோன் ஓஸெனிக்ஸ் லிமிட்.

**திருமதி ஷிறுணி அனோமா டுள்ளாள,**
கொஸ்வத்த வீதி,
நாவல, ராஜகிரிய.
(கம்பனிப் பணிப்பாளர்)
பணிப்பாளர்:
எலெக்ரோ குறூப் கம்பனிகள்.

**ஆர்தர் எட்வர்ட் தோமஸ் எல்லாவெள,**
14, கார்வில் பிளேஸ், கொழும்பு-3.
(கம்பனிப் பணிப்பாளர்)
பணிப்பாளர்:
மினேர்வா லப்பிடறீஸ் லிமிட்டெட்;
மிடாஸ் ஜுவலெறி இன்ரர்நெஷனல் லிமிட்டெட்.

**மொகமட் ஷெரீப் மொகமட் யஸீன் மரைக்கார்,**
மக்ளியோட் வீதி, கொழும்பு.
(கம்பனிப் பணிப்பாளர்)
பணிப்பாளர்:
புறெஸ்ற்ரெயார் லிமிட்டெட்;

**விஸ்வநாதர் சின்னத்தம்பி முத்துவேலு,**
60/1, பார்ன்ஸ் பிளேஸ், கொழும்பு-7.
(கம்பனிச் செயலாளர்)

## திட்டமும், அமைவிடமும்:

இந்த ஹோட்டல், எலெக்ரோ குறூப் கம்பனிகளின் தலைமை அலுவலகத்திற்கு முன்னால் நிறுவப்படும். இது, புதிய பாராளுமன்றத் தொடரின் அண்மையிலுள்ளது. இதற்கான 10 ஏக்கர் காணியில் இதுவரை 6 ஏக்கர் நிலம் ஹோட்டலுக்காக மணலால் நிரப்பப்பட்டு சுமார் 10 அடி உயர்த்தப்பட்டுள்ளது. மற்றைய 4 ஏக்கர் நிலம் கலாச்சார நிலையத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இது ஸ்ரீ ஜயவர்த்தனபுரத்தினூடாகப் பாயும் டியவன்ன ஓயாவோடு ஓர் கூரைகொண்ட மரத்திலாலான பாலத்தினால்ஹோட்டலோடு இணைக்கப்படும்.

## வரிச்சலுகைகள்:

பங்குதாரர்களும், கம்பனியும் கீழ்க்காணும் சலுகைகள் / நிவாரணங்கள் / நன்மைகளைப் பெறமுடியும்.

### பங்குதாரர்களுக்கு:

1. 100% முதலீட்டு நிவாரணம்
2. பங்கு இலாபத்திற்கு வரி விடுமுறை
3. பங்கு இலாபங்களுக்கு நிறுத்தி வைத்த வரிவிலக்கு
4. கம்பனிகள் பெறும் பங்கு இலாபங்களுக்கு வரி இல்லை.
5. மூலதன இலாபங்களுக்கு வரி விலக்கு

### கம்பனிக்கு:

1. 10 வருட வரி விடுமுறை
2. கம்பனிக்குக் குறைந்த வரி விகிதம்

பணிப்பாளர்,
எலெக்ரோ ஹொலிடே றிஸோர்ட்ஸ் லிமிட்.,
C/o மேர்ச்சென்ட் பாங்க் ஒவ் ஸ்ரீலங்கா லிமிட்.,
411, காலி வீதி, கொழும்பு-3.

அன்புடையீர்,

பங்கீடு வழங்குகை அடங்கிய முன் விவரணம் ஒன்றையும், பங்கீடு விண்ணப்பப்படிவம்/வங்களையும் தயவு செய்து அனுப்பி வைக்கவும்.

பெயர்: ..............................................
..............................................
விலாசம்: ..............................................
..............................................
..............................................

# எலெக்ரோ ஹொலிடே றிஸோர்ட்ஸ் லிமிட்டெட்.

1032, கோட்டே வீதி, வெலிக்கட, ராஜகிரிய.

# இன்றைய பலன்

பங்குனி மாதம் 17-ம் திகதி
வியாழக்கிழமை
(31—3—83)

மேடம்; கருத்தொருமித்த காதலர் வாழ்வில் மறக்கமுடியாத நிகழ்ச்சிகள் இடம் பெறும். காதலர்கள் இன்பத்தில் மிதப்பார்கள். கரும்பு போல் வாழ்க்கை இனிக்கும்.

இடபம்- விபத்திற்கு இடம் ஏற்படும். எதிலும் நிதானத்துடன் நடந்துகொள்ளவும். பல வழிகளிலும் பணம் செலவாகும். கடன்படவும் நேரிடலாம் எதிரிகள் அட்டகாசம் அதிகரிக்கும்.

மிதுனம்: பிறருக்கு உதவி செய்வதில் முன்நிற்பீர்கள். ஒளிமயத்திற்கான அறிகுறிகள் தென்படும். புதிய நண்பர்களின் சேர்க்கை அதிகரிக்கும். பிதா வழிச்சுகமும் கிடைக்கும்.

கடகம்; தொழில்துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும். சந்திப்புக்கு ஏற்றவண்ணம் பொருள் தாராளமாகக்கிடைக்கும். மேலிடத்து வாழ்த்துக் கிடைக்கும்.

சிங்கம்: வருமானத்தில் அபிவிருத்தி காணப்படும். பிறந்தகத்தில் இருந்து பிரிந்தவர்களுக்கு அழைப்புக் கிடைக்கும் விருந்தூட்டும் சாதனை ஒன்று நிறைவேற்றப்படும்.

கன்னி: ஆயுதபீடைக்கு இடமுண்டு. ஆரம்ப சூரத்தனம் ஆபத்தில் முடியலாம். தொல்லைகள் அதிகரிக்கும். கழுகுப் பார்வை வட்டமிடும். ஆணவப்பேச்சினால் அடிசறுக்க நேரிடும்.

துலாம்; பிரயாணத்தின் போது பொருள் நழுவக்கூடும். தனிவழிப் பயணத்தைத் தவிர்த்துக்கொள்ளவும். கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர்.

விருச்சிகம்: உத்தியோக உயர்வுக்கும் உரிமைகளைப் பெறுவதற்கும் உகந்தநாள். சந்தர்ப்பத்திற்கு ஏற்றவண்ணம் பொருள் கிடைக்கும். கனிவான நிகழ்ச்சிகள் நடைபெறும்.

தனு: தற்பெருமை மூலம் தடுமாற்றம் ஏற்படும். உண்மை இன்று ஊமையாகிவிடும். குறுக்குவழியில் இறங்குவதால் சட்டத்தின் பிடியில் மாட்டிக்கொள்வீர்கள்

மகரம்: பொறியியலாளருக்கு பொன்னான தினம். தொழிலாளர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். பிரிந்தவர் வாழ்வில் மீண்டும் இணைவார்கள். வாகன சுகமும் கிடைக்கும்.

கும்பம்: வாழ்க்கையில் திரவிய லாபத்திற்கு இடமுண்டு. பெண்களின் உதவி தாராளமாகக் கிடைக்கும் சகோதரவழியால் நன்மையான கொண்டாட்டம் நடைபெறும்.

மீனம்: ஏமாற்றத்தின் தாக்குதலால் அவதிப்படுவீர்கள் நண்பர்கள் காலை வாரிவிடக்கூடும். கவலைகள் அதிகரிக்கப்படலாம். உழைப்பில் மந்தநிலை உருவாகும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை.

## ஞான வைரவர் தேவஸ்தானஉதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். நவீன சந்தை ஸ்ரீஞான வைரவர்தேவஸ்தானம் பதினையாயிரம் ரூபாவை, யாழ். அரசினர் வைத்தியசாலை, அவசர சத்திர சிகிச்சைப் பிரிவுக்கு வழங்கியுள்ளது.

இத்தொகையை, தேவஸ்தானத் தலைவர் திரு. மு. தம்பித்துரை, செயலாளர் திரு. ஏ. எஸ். நடராசா, பொருளாளர் திரு. கே. இராசதுரை ஆகியோர் கூட்டாக, ஆஸ்பத்திரி நிர்வாகத்திடம் ஆலய முன்றலில் வைத்துக் கையளித்தனர். [கெ]

## அனுராதபுரத்துக்கு மாற்றலாகிறார்

[யாழ்ப்பாணம்]

திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி அனுராதபுரம் மேல்நீதிமன்ற நீதிபதியாக ஏப்ரல் முதலாம் திகதி தொடக்கம் பதவி ஏற்கவிருக்கிறார். மாத்தறையில் இப்பொழுது நீதிபதியாக இருக்கும் அவர் முன்பு யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதியாகப் பதவி வகித்திருக்கிறார்.

## ரூ. 70 ஆயிரம் செலவில் சப்பரம்

[பண்டத்தரிப்பு]

மாதகல் அருள்மிகு புவனேஸ்வரி அம்மன் ஆலயத்திற்கு 70ஆயிரம் ரூபா செலவில் புதிய சப்பரம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. மாதகலைச்சேர்ந்த திரு. க. அம்பலவாணர் குடும்பத்தினர் இதை அமைத்துக்கொடுத்துள்ளனர் திருநெல்வேலி ஸ்தபதி சிற்பகலாமணி ஆறுமுகம் ஜீவரத்தினம் ஆச்சாரியாலும் அவரது குழுவினராலும் உருவாக்கப்பட்ட இந்த சப்பரத்தின் வெள்ளோட்டம் டந்த சனிக்கிழமை நடைபெற்றது.

## வடமாகாண ரீதியில் புளியங்கூடலில் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி

[புளியங்கூடல்]

தமிழ் புதுவருடப்பிறப்பை முன்னிட்டு வடமாகாண ரீதியில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியொன்று ஊர்காவற்றுறைத் தொகுதியைச் சேர்ந்த புளியங்கூடலில் நடைபெறவுள்ளது.

'ஏ', 'பி', 'ஸி' என மூப்பிரிவுகளாகப் புளியங்கூடல் புதுவெளி விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கும் இப்போட்டிக்கான ஏற்பாடுகளைப் புளியங்கூடல் விவசாயிகள் கழகம் செய்து வருகிறது. (அ)

## "கூட்டுறவு இயக்கத்தில் அரசியல் சிந்தனை தலைதூக்கக் கூடாது"

(சுன்னாகம்)

"நாட்டிலுள்ள அதிகமான கூட்டுறவுச் சங்கங்களிலும் ஊழல்களும் மோசடிகளும் தலைதூக்கி நிற்கின்றன அரிசியில் மோசடி, சீனியில்மோசடி, பருப்பில் மோசடி, இப்படி ஏழைகளுக்காக வழங்கப்படும் உணவுப் பொருட்களில் எல்லாம் இன்று மோசடி தான் பரவலாக நாட்டின் இன்றைய கூட்டுறவின்நிலை இதுதான்"

மேற்கண்டவாறு சுன்னாகம் ப. நோ. கூ. சங்க இயக்குநர் சபைத் தேர்தலில் ஒரு குழுவாகப் போட்டியிடும் முன்னாள் இயக்குநர் திரு. சின்னையா சிவஞானம் (சுசிதர் இணுவில் கலாஜோதி சன சமூக நிலையத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசும்பொழுது கூறினார். திரு. இ. செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. சிவஞானம் தொடர்ந்து பேசுகையில்குறிப்பிட்டதாவது:

எமது பகுதி சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம், அரிசி, மா, சீனி போன்ற பொருட்களை மட்டும் விற்பனை செய்யும் நிலையமாக மாறிவிட்ட துர்ப்பாக்கிய நிலையை மாற்றியமைக்கவேண்டும். உறுப்பினர்களிடையே இக்கனம், ஒருவருக்கொருவர் உதவும்திட்டம், தன்னுதவித்திட்டம் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை. அபிவிருத்தித்திட்டமோ செயற்பாடோஇல்லை போதியவேலைவாய்ப்பு அளிக்கப்படவில்லை. கிராமிய பொருளாதாரம் கட்டியெழுப்பப்படவில்லை, பிரதேச அபிவிருத்திக்கு எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை. எங்கும் எதிலும் சட்டவரையறைகள் மீறப்படுகின்றன. எமது நாட்டில் கூட்டுறவு இன்னும் வளர்ச்சிபெறவில்லையென்றே கூறவேண்டும்.

குறுகிய அரசியல் சிந்தனை கொண்ட தலைவரோ இயக்குநர்களோ செயற்படுத்த முன்வரக்கூடாது. அரசியல்வாதிகள் கூட்டுறவில் ஈடுபடுவதானால் சங்கத்தின் படிகளில் கால் எடுத்து வைக்கும் பொழுது தனது அரசியல் சட்டைகளைக் கழற்றிவைத்துவிட்டே வரவேண்டும். கூட்டுறவு இயக்கத்தில் புனிதமாக ஈடுபட விரும்புபவன் தனது அரசியலை எந்தச் சந்தர்ப்பத்திலும் புகுத்தக்கூடாது". (மா—)

## திருமலை ப. நோ. கூ. ச. புதிய இயக்குநர்சபை

(திருகோணமலை)

திருகோணமலை ப.நோ.கூ. சங்கத்தின் புதிய இயக்குநர்களைக் கூட்டுறவு உதவி ஆணையாளர் நியமனம் செய்துள்ளார். கூட்டுறவு இலாகாதலைமைக் காரியாலயப்பரிசோதகர் திரு. க. மகாலிங்கம் தலைவராகவும், திரு ஜி. கே. வெற்றிவேல் உபதலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சங்கத்தின் புதிய பொது முகாமையாளராகவும் இயக்குநர் சபைச் செயலாளராகவும் திரு. பொ. விக்கிரமநாயகம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இச்சங்கத்தின் நிதிமோசடி சம்பந்தமாக முன்னைய பொது முகாமையாளர் இடைநிறுத்தம் செய்யப்பட்டு சுமார் 2வருடத்தின் பின்பே இந்நியமனத்தைத் திருகோணமலை கூட்டுறவு உதவி ஆணையாளர் செய்துள்ளார். [துணு—நி]

## வடமாகாண நீதிமன்ற பதிவாளர்கள் நியமனம்

[யாழ்ப்பாணம்]

வடமாகாணத்தில் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட நீதிமன்றப் பதிவாளர் சேவைக்கு பின்வருவோர் நியமனம் பெற்றுள்ளார்கள்' அவர்களின் விபரம் வருமாறு:-

யாழ். மேல் நீதிமன்றம் பதிவாளர்: திரு வி.சி.பரமநாதன் பிரதிப்பதிப்பாளர்: திரு ஏ. இறில்.

மாவட்ட நீதிமன்றங்கள்:

யாழ்ப்பாணம்: திரு ரி.குலஞானம், ஊர்காவற்றுறை: திரு ஏ.நடராசா, மல்லாகம்: திரு ஏ.சிவபாதசுந்தரம், பருத்தித்துறை: திரு ஆர்.ஜெயராசசிங்கம், சாவகச்சேரி: திரு வி.சிவசுப்பிரமணியம், வவுனியா: திரு ஸ்ரீபதிதாசன், மன்னார்: திரு எம்.பதுமநாதன், முல்லைத்தீவு திரு எம்.ஸ்ரீபத்மநாதன்.

நீதவான் நீதிமன்றங்கள்:

யாழ்ப்பாணம்: திரு எம். நல்லலிங்கம், பருத்தித்துறை; திரு கே.செல்வராஜா, சாவகச்சேரி: திரு எம் நடராசா, கிளிநொச்சி; திரு அருளானந்தம்.

ஆரம்ப நீதிமன்றங்கள்:

வேலணை: திரு எஸ் கந்தசாமி, மல்லாகம்: திரு எம்.சிவபாதசுந்தரம், மன்னார்: திரு ஜெகநாதன், முல்லைத்தீவு: திரு ஆர். ஜே. ஒகஸ்டீன்.

[மா—அ]

## நெடுந்தீவு பயணச்சேவையில் மீண்டும் 'குமுதினி'


(நெடுந்தீவு)

நெடுந்தீவு அரச மோட்டார் படகு சேவையில் உள்ள 'குமுதினி' படகு நவீனமுறையில் புனரமைக்கப்பட்டு மீண்டும் சேவைக்கு விடப்பட்டுள்ளது.

குறிகட்டுவான் துறைமுகத்தில் அதன் ஆரம்ப வெள்ளோட்ட நிகழ்ச்சியைத் தொடக்கிவைத்த தீவுப்பகுதி பிரதிநிதி பண்டிதர் கா. பொ.இரத்தினம், நெடுந்தீவு மக்கள் இப்போது திருப்தியான சேவையைப் பெற்றிருப்பதுடன் படகுகளும் சிறப்பான முறையில் பாதுகாக்கப்பட்டு வருவதாகக் கூறினார். சேவைக்குப் பொறுப்பான வடபிரதேச இயந்திரப் பொறியியலாளர் திரு. என். நித்தியானந்தன், 'படகு ஊழியர்கள் இச்சேவை நெடுந்தீவு மக்களின் அத்தியாவசிய தேவை என்பதை மட்டுமன்றித் தமது சொந்த ஊர் மக்களுக்குப் பணியாற்றுகிறோம் என்றமனநிறைவுடன் கடமையில் ஈடுபடவேண்டும்' என்று கேட்டுக் கொண்டார். பொதுமக்களும் பொதுத்தாபனங்களும் இதன் சிறப்புக்குமென்மேலும் உதவ வேண்டும், என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவர் திரு. இ. வ. சங்கரப்பிள்ளை, நெடுந்தீவு முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. என். இலட்சுமணவாசா ஆகியோர் சேவையில் சிலமாற்றங்களைச் செய்து தருமாறு எம் பி ஐயும் பிரதேசப் பொறியியலாளரையும் கேட்டுக் கொண்டனர். திணைக்கள பிரதான இயந்திரப் பொறியியலாளர் திரு. ஏ. நைல்ஸ் உட்படத் திணைக்கள உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் வைபவத்தில் கலந்து கொண்டனர். (அ)


உங்கள் பணத்திற்கு....
28% வட்டி...



சிறந்த பாதுகாப்பு வருமானம் உத்தரவாதம்

| காலம் | ரூபா 500/- — ரூபா 99,999/- | | ரூபா100,000/- அதற்கு மேல் | |
|---|---|---|---|---|
| | மாதாந்தம் | கால முதிர்வு | மாதம் | கால முதிர்வு |
| 3 மாதம் | — | 16% | — | 17% |
| 6 மாதம் | — | 17% | — | 19% |
| 12 மாதம் | 19% | 22% | 20% | 23% |
| 18 மாதம் | 20% | 23% | 21% | 24% |
| 24 மாதம் | 21% | 25% | 22% | 26% |
| 30 மாதம் | 22% | 26% | 23% | 27% |
| 36 மாதம் | 23% | 27% | 24% | 28% |

மகாராஜா முதலீட்டு (வரையறுக்கப்பட்ட) நிதிநிறுவனம்
122, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 8267

கவர்ச்சிகரமான வட்டி விகிதங்கள் 27% வரையுண்டு

| | ரூ 500க்கு அதிகமான வைப்புக்கு | | 1,00,000 ரூபாவுக்கு அதிகமான தொகைக்கு கால முதிர்வின்போது |
|---|---|---|---|
| | மாதாந்தம் வட்டி | காலமுதிர்வு வட்டி | |
| 6 மாதம் | — | 18% | 21% |
| 12 மாதம் | 21% | 22% | 23% |
| 24 மாதம் | 23% | 25% | 27% |

சுருக்கமான தகவல்கள்

| நிதி அறிக்கை | 1977/78 ரூபாய் | 1978/79 ரூபாய் | 1979/80 ரூபாய் |
|---|---|---|---|
| பங்கு மூலதனம் | 4,030 | 250,000 | 250 000 |
| ஒதுக்கிய மூலதனம் | 143,588 | 246,615 | 1 706 147 |
| வைப்பு மூலதனம் | 3,579,820 | 325 480 | 22,139,163 |
| நிகரலாபம் (வரிகட்ட முன்) | 181,417 | 667 461 | 2,135,871 |
| நிகரலாபம் (வரிகட்டிய பின்) | 163,916 | 453,777 | 1 635,873 |
| பங்குலாபம் | — | 250,000 | 187,500 |

இயக்குனர்கள்
1. திரு. ஆர். மகாராஜா (நிர்வாக இயக்குனர்)
2. திரு. ஆர். இராஜமகேந்திரன் (நிர்வாக இயக்குனர்)
3. திரு. வி. என் குமாரசாமி, F.C.A (Eng. & Wales), ATII (Eng.) M.Inst A.M (Eng.), AMBIM(Eng.), F.C.A.(Cey.)
4. திரு. பி. மகிந்தா B. Sc. (Hons)
5. திரு. வி. சண்முகம் LLB (Lond) Hons A I B (Lond) சட்டத்தரணி
6. திரு. டி ஜே. குணவர்த்தன B.Sc., A.C.A. A.C.M.A
7. திரு. டபிளயு பலநாயக்கா MBIM (Eng.)
8. திரு. ஈ. குணசேகரா

வியாபார நோக்கங்கள்
★ முதலீட்டு வைப்பு
★ கைத்தொழிலாளர்களுக்கு இயந்திராதிகள், மூலப்பொருள் இறக்குமதிக்கு கடன்வசதி
★ காப்புறுதி முகவர்.

ஸ்தாபகம்: 29-09-1976.
தலைமையகம்: யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
காரியாலயம்: 54 பாங்ஷால் வீதி கொழும்பு.

# அணிசேரா இயக்கம் இந்திரா தலைமையில் ஐநாவுக்கு பூரண நம்பிக்கை உண்டு

## மாஸ்கோவில் ஐ.நா. செயலாளர்

மாஸ்கோ, மார்ச் 30

"இந்தியப்பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி தலைமையில் அணிசேரா இயக்கம் ஈராக்-ஈரான் பிரச்னை உட்பட ஏனைய பிரச்னைகளுக்குதீர்வுகாணும் என்பதில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்துக்கு பூரண நம்பிக்கை உண்டு."

இவ்வாறு ஐக்கிய நாடுகள் ஸ்தாபன பொதுச்செயலாளர் திரு. ஜாவியா பெரஸ்டி கொய்லர் மாஸ்கோவில் பத்திரிகையாளர்களிடம் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது; "அணிசேரா இயக்கம் திறம்பட இயங்கி வருகிறது. அதன்பணிகள் வெற்றிபெற ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் வாழ்த்துக்கள் என்றும் அதற்கு இருந்துவரும் அத்துடன் அணிசேரா இயக்கம் பிரச்னைகளைத் தீர்க்க எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஐ. நா. ஸ்தாபனம் என்றும் உறுதுணையாகஇருக்கும்" என்றார்.

ஐ. நா. செயலாளர் திரு. கொய்லர் சோவியத் அதிபர் திரு. யூரி அந்ரபோவ், பிரதிப் பிரதமர் திரு. அந்ரே குரொமிக்கோ ஆகியோருடனும் ஆப்கான் நிலவரங்கள் குறித்து உரையாடினார்.

இந்த உரையாடலின் விபரங்கள் எதுவும் தெளிவாகத் தெரிவிக்கப்படவில்லைஎனினும் ஆப்கானிலிருந்து தனது துருப்புக்களை வாபஸ்பெறுவது பற்றி சோவியத் உறுதியாக எதனையும் தெரிவிக்கவில்லையென்று தெரியவருகின்றது.

இதுவாறிருக்க அமெரிக்கப் பத்திரிகைகள் சோவியத் அதிபர் திரு. யூரி அந்ரபோவ் சிறுநீரகக் கோளாறினால் அவஸ்தைக்குள்ளாகியுள்ளார் என்று செய்தி வெளியிட்டிருந்தன. ஆனால் திரு. அந்ரபோவ், ஐ. நா. செயலாளரைச் சந்தித்தவேளை ஆரோக்கியமாக இருக்கக்காணப்பட்டார். அவரின் முகத்திலோ அல்லது தேகநிலையிலோ நோயொன்றினால் பீடிக்கப்பட்டதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை.

ஐ. நா. செயலாளர் திரு. கொய்லர் தமது சோவியத் யூனியன் பயணத்தை முடித்துக்கொண்டு பாரிஸ் பயணமானார். (இ)

## றீகனின் சட்டத்தரணியின் மகன் விளக்க மறியலில்

லாஸ்ஏஞ்சலிஸ், மார்ச் 30

ஜனாதிபதி றீகனின் பிரத்தியேக சட்டத்தரணியின் இருபது வயது மகன் ஒருவர் தாயைக் கொலைசெய்தார் என்ற குற்றச்சாட்டையடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவருக்கு விசாரணைமுடிவில் ஆயுள்காலச்சிறை, அல்லது மரண தண்டனை விதிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மைக்கல் மில்லர் என்பவரே றீகனின் அந்த சட்டத்தரணியாவார். இவர் வீடுதிரும்பிய போது மார்கிரெட்மிலர் என்ற இவரது 52 வயது மனைவி கோரமாகக் கொலைசெய்யப்பட்டிருக்கக் காணப்பட்டார்.

இதனையடுத்து பொலிஸார் ஸ்தலத்துக்கு வந்து விசாரணைகளை நடத்தியபோது அவரின் 20வயது மகன் கைதுசெய்யப்பட்டார்

கொலைசெய்யப்பட்ட மார்கிரெட்மில்லர் கற்பழிக்கப்பட்டிருந்தாரென்றும் தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் இக் கொலைபற்றிய விசாரணைகளை அந்தளவு பத்திரிகைகளுக்கு வெளிப்படுத்தவில்லை. (கி)

## அருள் பாலிப்பாள் அன்னை ஸ்ரீபுவனேஸ்வரி

திருவருள்நிறை சுதுமலையம்பதிவாழ் அன்னை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் திருக்கோவில் குடமுழுக்கு வைபவம் இன்று வியாழனன்று (31-3-83)நடைபெறுகின்றது.

சுதுமலை, சுதுகிரி, சகிலை என்று பலவாறு அழைக்கப்பெறும் இத்தலத்தில்உறையும் தேவி லலித மகாதேவியின் மறுவுருவமாகவும், சக்தியின் இருப்பிடமாகவும் போற்றப்படுகின்றாள்.

இன்று மக்கள் நெஞ்சம் குளிர தேவியின் திருக்கோயில் கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. ஞாலம்புரக்கும் அன்னை மகாதிரிபுரசுந்தரி ஸ்ரீபுவனேஸ்வரி இங்கு நம் மத்தியில் கோயில் கொண்டது நம் புண்ணியமே. இதன் பெருமையை இத்தகைய வைபவங்களினால் புதுப்பித்துக்கொண்டு பெரும்பேறு பெறுவோமாக.

-சுதுவை நாதன்

## வை. எம். சி. ஏ. புதிய தலைவர்

(கிளிநொச்சி)

பரந்தன் வை எம் சி ஏ. நிலையத் தலைவராக கொத்தனி செயலாளரும் அதிபருமான ஏ. கே. இராசேந்திரம் ஏகமனதாக தெரிவானார்.

செயலாளராக விவசாய முகாமையாளர் கே. அரசகுலசிங்கமும், பொருளாளராக கே. பாக்கியநேசரும் தெரிவாகினார்கள். (அ)

## பிரதமர் இந்திரா காந்தி அஸாம் மாநிலம் விஜயம்

புதுடில்லி மார்ச் 30

கலவரங்களால் பாதிப்படைந்த இடங்களைப் பார்வையிட அஸாம் மாநிலத்துக்கு பிரதமர் இந்திரா காந்தி விஜயம் மேற்கொள்கிறார்.

அங்கு அவர் மூன்று தினங்களைக் கழிப்பார் அஸாம் மாநில கவர்னர் பிரகாஷ் மல்ஹோத்ரா முதல்வர் திரு. சக்கியா ஆகியோரும் பிரதமருடன் பாதிப்படைந்த இடங்களுக்குச் செல்வர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளர்ச்சியாளர் சிலரிடையே அஸாமிலுள்ள பகுதியொன்றில் மோதல் ஏற்பட்டது. இம்மோதலில் பத்துப்பேர் பலியானார்கள். பலர் படுகாயமடைந்தனர்.

இம்மோதல் தொடர்பாக இப்பகுதியில் அப்போது கடமையாற்றிய பொலிஸார் சிலர் தற்காலிக வேலை நீக்கஞ் செய்யப்பட்டுள்ளனர். உரிய நடவடிக்கைகளில் இறங்கி கலகத்தை அடக்காததே இதற்குக் காரணமாகும். (கி)

## மேற்கிந்தியாவை இந்தியா வென்றது!

ஜோர்ஜ்டவுண் மார்ச் 30

மேற்கிந்திய கிரிக்கெட் அணியுடனான மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் கிரிக்கெட் சர்வதேச போட்டியில் இந்தியா வெற்றி பெற்றது.

இந்திய கிரிக்கெட் அணியின் மேற்கிந்திய சுற்றுப் பயணத்தின் இரண்டாவது சர்வதேசபந்தயமாக இது விளங்கியது.

இந்திய அணி 27 ஓட்டங்களினாலேயே மேற்கிந்திய அணியை வென்றது. மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் பந்தயமொன்றில் மேற்கிந்திய அணியை இந்தியா வென்றது இதுவே முதல் தடவையாகும். (இ)

## தென்ஆசிய அபிவிருத்திக்கு ஒருங்கிணைந்த திட்டம்

டாக்கா, மார்ச். 30

தென் ஆசியப் பிராந்திய நாடுகளின் வளர்ச்சிக்கு ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்குவதென்று தீர்மானிக்கப்பட்டது.

நேற்று டாக்காவில் முடிவடைந்த இந்தியா, பங்களாதேஷ், பூட்டான், நேபாளம், இலங்கை, மாலைதீவு, பாகிஸ்தான் ஆகிய7நாடுகளின் வெளிநாட்டமைச்சர்களின் செயலாளர்களது மகாநாட்டிலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

புதுடில்லியில் நடைபெறவுள்ள மேற்குறிப்பிட்ட ஏழு நாடுகளின் வெளிநாட்டமைச்சர்களது மகாநாட்டில் இத்தீர்மானம் விரிவாக ஆராயப்படுமென்றுந்தெரிவிக்கப்பட்டது.

விவசாயம், தொலைத்தொடர்பு, போக்குவரத்து, சுகாதாரம் ஆகியவற்றைமேம்படுத்துவது தொடர்பாகவும் விளையாட்டு, கலை,கலாச்சாரங்களை மேலும் விருத்திசெய்வது தொடர்பாகவுமே இத்தீர்மானத்தில் ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன

இந்த ஆலோசனைகளை நடைமுறைப்படுத்துவதற்கென இந்த ஏழு நாடுகள் சார்பில் நிரந்தரக்கமிட்டி ஒன்று அமைக்கப்படவேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டது. (கி)

## உதைபந்தாட்டம்: நேரு தங்கக் கிண்ணத்தை ஹங்கேரி பெற்றது

கொச்சி, மார்ச். 30

ஹங்கேரி இந்த வருடத்துக்கான 'சர்வதேச நேரு தங்கக் கிண்ணத்'தைப் பெற்றுக் கொண்டது.

இந்தக் கிண்ணத்துக்கான இறுதி உதைபந்தாட்டப் பந்தயம் நேற்றிரவு கொச்சியில் மிக விறுவிறுப்பாக நடைபெற்றது. சீனாவும், ஹங்கேரியுமே இப்போட்டியில் கலந்துகொண்டன.

பந்தயத்தின் முதல் அரைப் பகுதியில் இருஅணிகளில் எதுவும் கோல்கள் போடவில்லை. இரண்டாவது அரைப்பகுதியிலேயே ஹங்கேரி 2கோல்களைப் போட்டு வெற்றி பெற்றது. சீனா ஒரு கோலை மட்டுமே போட்டது.

மத்திய நிதியமைச்சர் திரு. பிரணப் முகர்ஜி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு, நேரு தங்கக் கிண்ணத்தை வெற்றிபெற்ற ஹங்கேரிக்கு வழங்கினார். (கி)

## புங்குடுதீவில் புதுவருட விளையாட்டுப் போட்டி

(சரவணை)

புங்குடுதீவு சிவலைப்பிட்டி சனசமூக நிலையத்தின் ஆண்டு விழாவை யொட்டி மாபெரும் விளையாட்டுப்போட்டி அடுத்த மாதம் 12, 13, 14, ம் திகதிகளில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

நீச்சல்போட்டி, மரதன் ஓட்டப்போட்டி, சைக்கிள் ஓட்டப்போட்டி, உதைபந்தாட்டம் என்பன விளையாட்டுக்களில் முக்கிய இடம் பெறுகின்றன. (அ)

## மீண்டும் தலைவர்

(கிளிநொச்சி)

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் பிரதேச சபைத் தலைவராக மு இ செல்லத்துரை மீண்டும் தெரிவானார். இவர் ஆத்தியம்மன் ஆலய பரிபாலன சபைத் தலைவரும் புலோப்பளைகிராமோதயசபையின் தலைவருமாவார். [அ]

வெலிங்டன் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள் கமலஹாசன் நீல மலர்கள்

லிடோ (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள் நினைவில் நின்றவள்

றீகல் (யாழ்நகர்) கடைசித்தினம் 1-4-83 தினசரி 4 காட்சிகள் ஜெமினி-சரோஜாதேவி கல்யாண பரிசு

ராஜா (யாழ்- நகர்) தினசரி காலை 10-30, பி.ப. 2-30 மாலை 6-15, இரவு 9-30 துணிவே துணை (இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி-ஈஸ்மன் கலர்)

சாந்தி (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள் சிவாஜி-தேவிகா நீலவானம் (புதிய பிரதி)

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள் 10-30, 2-30, 6-30, 9-30 சிவாஜி, சரிதா, ஜெய்சங்கர் நடித்த கீழ்வானம் சிவக்கும் (கலர்)

வெலிங்டன் (காங்கேசன்துறை) தினசரி- 4-15, 7-00 சனி. ஞாயிறு 1-30 சிவாஜி- மோகனப்புன்னகை

ராணி தினசரி 10-00, 2-00, 6-30, 9-30 (யாழ். நகர்) எம். ஜி. ஆர். - ஜெயலலிதா தேடிவந்த மாப்பிள்ளை (ஈஸ்ட்மன் கலர்) (புதிய பிரதி)

ஹரன் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள் ஜெய்சங்கர்-லட்சுமிநடித்த ராணி யார் குழந்தை (புதிய பிரதி)

தென்னிந்திய ரசிகர்கள் 100 நாட்களுக்கு மேல் கண்டு களித்த தீந்தமிழ் திரையோவியம்! வின்ஸர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள் சிவகுமார்-சரிதா- சில்க் சுமிதா-சுருளிராஜன் வண்டிச்சக்கரம் (வண்ணக் கலர்)

மனோகரா (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள் சுருளி, சோ, மனோரமா நடித்த காசியாத்திரை (நகைச்சுவைப்படம்)

## புதிய தேசிய இனம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு செவிட்டு 'தலைவர்' என்ற வாசகம் காணப்பட்டது. எல்லோரும் பெரும் திருப்தியுடன் வாழ்ந்த அந்த 1950ல் இந்த இந்த வாசகம் ஒரு தீர்க்கதரிசி சனம் என்பதை யார்தான் கனவுதானும் கண்டிருப்பர்? திரு. செல்வநாயகத்தின் ஒலியான உருவத்தையும், செவிப்புலக்குறைவையும் ஏளனஞ் செய்ய எடுத்த முயற்சி அது. ஆனாலும் அந்த கூட்டை எதிர்கால வரலாற்றுக்கு ஒரு சூசகமாக அமைந்து விட்டது. அரசியலில் மாற்றுவழி எதை யும் காதில் போடமறுத்தமை யையும் எதிரணியினரின் கூக் குரல்களுக்கு செவிகொடுக்க மறுத்தமையும் செவிட்டுத் தன்மை குறிப்பிட்டுக் காட்டியது. அத்துடன் தங்கள் கண்ணைமூடியபடி இந்தத் தெய்வம் காட்டும் கிணற்றுள் விழவும் சம்மதம்கொண்ட பக்தகோடிகளானோர்கள் தமிழ் பேசும் மக்கள் என்னவிளைவு ஏற்பட்டாலும் அவருக்குப் பின்னால் கண்ணை மூடியபடி நடந்தார்கள் தமிழ்மக்கள்.

இவரது காலத்துக்கு முன்னர் இருந்த தமிழ்த் தலைவர்கள் சிங்கள மக்களுடனும் ஏனையோருடனும் ஐக்கிய இலங்கையில் தமிழ் மக்கள் எவ்வாறு ஒன்றாக வாழலாம் என்பது பற்றியே பேசினார்கள். அது சாத்தியமானது அல்ல என்பதைத் தீர்க்கதரிசி செல்வநாயகம் தெரிவித்துக் கொண்டார். எனவே தான் உருவாக்கிய தமிழ்த் தேசிய இனத்தைத் தனித்துவத்துடனும், பிறிதானதாகவும் உறுதியான ஓர் அடித்தளத்திலிட நடவடிக்கை எடுத்தார். அரசியலில் சுதந்திர இறைமையுள்ள அரசு ஒன்றை அவர் நிறுவினாரல்லர் ஆனால் அதற்கு முதற்படியாக அவர் தமிழ் பேசும் மக்கள் தங்களை ஒரு தேசிய இனமாகச் சிந்திக்க வைத்தார்.

## யாழ். ஆஸ்பத்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### தாதிமார் பிரச்னை

'பொதுச் சேவை தாதிமார் சங்கத்தில் தொண்ணூறு சதவீதம் யாழ் தாதிமார் அங்கம் வகிக்கின்றனர். ஆனாலும் அங்கீகரிக்கப்படவில்லை. முன்னர் யாழ். ஆஸ்பத்திரியில் தாதிமாருக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவியது. இது இன்றும் நீடிக்கிறது. உதாரணத்துக்கு, 1976ம் ஆண்டில் தாதிமார் பிரச்னை சம்பந்தமாக விசாரணை நடத்திய ஒரு குழு, நாட்டில் 12,000 தாதிமார் தேவையென்று சிபாரிசு செய்தது. ஆனாலும் இது அமுல் நடத்தப்படவில்லை. இன்று மொத்தம் 4453 தாதிமார்களே உள்ளனர். யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு 330 தாதிமார் தேவை. ஆனால் 212 தாதிமார்தான் கடமையாற்றுகின்றனர்'' என்று திரு. வெ. யோகேஸ்வரன் தெரிவித்தார்.

### 'அமிர் குற்றச்சாட்டு

''தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் 'கோபால்ட் யுனிற்' வந்து ஆறு மாதங்களாகி விட்டன. இன்னும் உபகரணங்கள் பொருத்தப்படவில்லை. இது குறித்துக் கேட்டால், பொறியியலாளர்கள் வரவேண்டுமென்று பதிலளிக்கப்படுகிறது. இதுவும் ஒருவகையான புறக்கணிப்பாகவே தோன்றுகின்றது'' என்று திரு. அ. அமிர்தலிங்கம் குற்றம் சுமத்தினார்.

திரு. எம். சிவசிதம்பரம் பேசுகையில், 'காலம் போகப் போக இந்த 'யுனிற்'றின் இயக்கச் சக்தியும் குறைந்துவிடலாம்'' என்று கவலை தெரிவித்தார்.

''யாழ் ஆஸ்பத்திரியில் எல்லாமே பற்றாக்குறையும், இல்லை என்ற நிலையும்தான். அதிகமாக இயந்திரங்கள் நீண்டகால பாவனை உடையது. பல செயலிழந்துவிட்டன'' என்றுகூறிய திரு. எம். சிவசிதம்பரம்;

''சிங்கள அலங்காரத்திற்கூட ஐந்து, ஆறு ஆண்டுகளுக்கு ஒரு தடவை கதிரை மாற்றுவார்கள். ஆனால் யாழ். ஆஸ்பத்திரியில் முக்கியமான பகுதிகளில் 25 வருடமாக அதே உபகரணங்கள்தான் பாவிக்கப்படுகின்றன'' என்றார்.

காலஞ்சர் எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேசுகையில், ''கொழும்பு ஆஸ்பத்திரிகளுக்கு என்று ஒரு அமைச்சர் இருக்கின்றார். கண்டியில் சகல வசதிகளுடன் கூடிய ஆஸ்பத்திரி பேராதனையில் உள்ளது. இதனை 13 கோடி 50 லட்சம் ரூபா செலவில் அமைத்துள்ளனர். இதனை நிர்வகிக்க வருடம் 50 லட்சம் ரூபா செலவாகிறது. சிங்களப் பகுதி ஆஸ்பத்திரி 6, 7 நோயாளர்களுக்கு ஒரு தாதி. ஆனால் இங்கே பதினைந்து நோயாளர்களுக்குத் தான் ஒரு [illegible]'' என்றார்.

எம். சிவா: ''யாழ். ஆஸ்பத்திரியில் என்ன புதிதாக இருக்கிறது' ஒன்றும் இல்லை. புதியதாகத் தாதிகள் நியமனம் இல்லை. புதிய வார்ட்டுகள் இல்லை. புதிதாகக் கட்டில்கள் இல்லை. புதிய கட்டடங்களும் இல்லை. நாங்கள் ஒவ்வொருவரும் (எம்.பி.க்கள்) நிறைய நிதி ஒதுக்குகின்றோம். இது சமுத்திரத்தில் கலந்துவிட்ட சிறுதுளிகளுக்கே சமமானது! யாழ் ஆஸ்பத்திரி குறைபாடுகள் குறித்து அரசு கவனிக்காது புறக்கணித்து வருகிறது'' என்றார்.

இலங்கைதீவின் சுதந்திரத்திற்கு முன்னர்சரி பின்னர்சரி அடைய முடியாதென ஆரம்பத்தில் தெரிந்த இந்த இலட்சியத்தை வேறெந்தத் தமிழ் தலைவரும் சாதிக்கமுடியவில்லை.

# தமிழ் மாணவர் பேரவையின் கிராம யாத்திரைக்கு பொலிஸ் அனுமதி மறுப்பு!

(யாழ்ப்பாணம்)

தமிழ் மாணவர் பேரவையினர் ஏப்ரல் 9ம் திகதி நடத்தவிருந்த நீண்ட தூர சைக்கிள் கிராம யாத்திரைக்கு பொலிசார் தடை விதித்துள்ளதால் எழுச்சி யாத்திரை கைவிடப்பட்டுள்ளதாக, தமிழ் மாணவர் பேரவைத் தலைவர் திரு. வேங்கை ஆனந்தன் அறிவித்துள்ளார்.

திரு. வேங்கை ஆனந்தன் இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

''தமிழ் மாணவர் பேரவையினால் ஏப்ரல் 9ல் நடத்தவிருந்த நீண்ட புரட்சிகர எழுச்சிக் கிராம யாத்திரைக்கு பொலிசார் அனுமதியளிக்காது தடை செய்துள்ளனர். இத்தடையை மீறுவோர்மீது நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் பேரவையின் தலைவருக்கு அறிவித்துள்ளனர். எனவே சைக்கிள் கிராம யாத்திரையைக் கைவிட்டுவிட்டோம். ஆனால், கிராமயாத்திரைக்கான சொல்லப்பெற்ற காரணங்களை அப்படியே வைத்து கிராமங்கள் தோறும் கிழமை நாட்களில் எழுச்சிக் கூட்டம் மாத்திரம் நடத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே, ஏப்ரல் 9லிருந்து திட்டமிட்டபடி கருத்தரங்குகள்மூலம் எழுச்சியை ஊட்ட தமிழ் மாணவர் பேரவை நடவடிக்கையினை எடுத்துள்ளது''. [ஈ]

## காங்கேசன்.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தால் நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் விசாரணையை அடுத்த மாதம் 6-ம் திகதிக்கு ஒத்திவைத்து அன்று நீதிமன்றத்தில் ஆஜராகவேண்டுமென சாட்சிகளுக்கு கட்டளை அனுப்புமாறும் உத்தரவிட்டார். 1ம், 2ம் எதிரிகளுக்காக சட்டத்தரணி எஸ் ஸ்ரீதரனும், 3ம் எதிரி சார்பில சட்டத்தரணி மு. திருநாவுக்கரசு, சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் ஆகியோரும் ஆஜராகினர்.

## காரைநகரில் இன்று அம்பிகைக்கு 1008 சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் திருமணற்காடு அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் இன்று காலை அம்பிகைக்கு ஆயிரத்தெட்டு சங்காபிஷேகம் நடைபெற உள்ளது. யாழ்ப்பாணத்தில் உள்ள நாதஸ்வர, தவில் வித்துவான்கள் அனைவரும் அம்பிகைக்குத் தங்கள் காணிக்கையைச் செலுத்துவார்கள். காலையில் அருள்மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார் கலைஞர்களுக்கு ஆசிவழங்குவார். கலைஞர் பி. எஸ் ஆறுமுகம்பிள்ளை இவ்வைபவத்தில் கௌரவிக்கப்படுவார். சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி முன்னிலையில் இன்று மாலையில் 'அம்பிகை பெருமை' பற்றி வாரியார் சொற்பொழிவு நிகழும்.

## இன்று மகாகும்பாபிஷேகம்

(மாவிட்டபுரம்)

கீரிமலை கிருஷ்ணன்கோவில் நவக்கிரக ஆலய மகாகும்பாபிஷேக விழா இன்று விமரிசையாக நடைபெறவுள்ளது. சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக்குருக்கள் பிரதம குருவாக இருந்து இக்கும்பாபிஷேக விழாவை நடத்திவைப்பார். ஆலய பரிபாலன சபையினர் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

## ஏப்ரலில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் போராளிகள் பொய்ச் சாட்சிகள்மூலம் ஆயுட்கால, மரண தண்டனை விதிக்கப்பட்டதையும் எதிர்த்தும், இவ்வித நீண்ட தூரயாத்திரையை நடத்துவதாக ஈழமக்கள் விடுதலை முன்னணி வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதங்களில் விளக்கியுள்ளது.

ஈழமாணவர் பொதுச் சபை, ஈழ இளைஞர் முன்னணி, கிராமத் தொழிலாளர், ஈழ பெண்கள் விடுதலை முன்னணி போன்ற அமைப்புகள் ஒன்று சேர்ந்த ஈழமக்கள் விடுதலை முன்னணி இந்த நீண்டதூர பாதயாத்திரையை நடத்துகிறதென்றும் அக்கடிதத்தில் விளக்கப்பட்டுள்ளது.

## இன்று நடக்கும் பெற்றார் தினவிழா

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை அ. மி. த. க. பாடசாலை பெற்றார் தின விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் திரு க. தம்பிராசா ஜே. பி. தலைமையில் நடைபெறவிருக்கிறது.

## தப்பியோடிய....

(1ம் பக்கத் தொடர்ச்சி

பல முயற்சிகள் மேற்கொண்டிருந்தனர்.

பொலிசாரின் கைக்குள் அகப்படாமல் தப்பித்துக் கொள்வதற்காகவே யாழ். சிறைச்சாலை பிரதம ஜெயிலரிடம் இவர் சரணடைந்தாராம்.

இவர் தொடர்ந்து றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

## நீண்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கும், மாணவர் இயக்கங்களுக்கும் ஈழ மக்கள் விடுதலை முன்னணி நிர்வாகச் செயலாளர் திரு மு. டேவிற்சன் தனித்தனியே வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தப் புரட்சிகரப் பயணம் யாழ்ப்பாணத்தில் முக்கியமான ஒரு இடத்திலிருந்து பிரதான வீதிவழியாக ஆரம்பமாகி ஏப்ரல் 18ம் திகதிவரை தொடர்ந்து நடைபெறும். [ஈ]


## வருடாந்த இருப்பெடுத்தல்

எமது நிறுவனம், இவ்வாண்டுக்கான இருப்பெடுத்தலுக்காக,
02-04-83, 03-04-83 ஆகிய இரு தினங்களும்
வியாபாரத்திற்காக, மூடப்பட்டிருக்கும் என்பதை
வாடிக்கையாளர்களுக்கு தெரிவிக்கின்றோம்.

## அம்பலவாணர் அன் சன்ஸ்

196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24291

## ஹோம் பிஞன்ஸ் லிமிட்டெட்

### உல்லாச பஸ்சேவை

தினசரி மாலை 8 - 30 மணி கொழும்பில் இருந்து----யாழ்ப்பாணத்துக்கு
தினசரி மாலை 7 - 45 மணி யாழ்ப்பாணத்தில் இருந்து-----கொழும்புக்கு
கண்ணியமான பாதுகாப்பான பஸ்சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கற் பெறுமிடங்கள்:-

(1) ஹோம்பிஞன்ஸ் லிமிட்டெட்.
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 24310

(2) யாழ். ஐக்கிய வியாபார சங்கம்
இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 22370—22438—22537

(3) யாழ்மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23596

(4) குயிக் ட்ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்
சரஸ்வதி கார்டின்ஸ், சேர்ச் லேன், சாவகச்சேரி
தொலை பேசி இல: 22273. சாவகச்சேரி

கொழும்பில் டிக்கற் பெறுமிடங்கள்:

(1) ஹோம் பிஞன்ஸ் லிமிட்டெட்
இல: 463, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190

(2) ரவீந்திரா ஸ்டோர்ஸ்
இல: 885, காலி வீதி, வெள்ளவத்தை.

(3) லங்கா பம்பே சுவீட் ஹவுஸ்,
இல. 105, ஒல்கொட் மாவத்தை, புறக்கோட்டை.
தொலைபேசி இல: 22830

(4) நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
இல: 127, காலி வீதி. பம்பலப்பிட்டி.
தொலைபேசி இல: 88866


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இலங்கோவில் வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number Q. B. 100236/81. Eelanaadu - P. O. Box: 49, Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.